## *எண்ணெய் வித்துக்களுக்கான விலை முன்னறிவிப்பு*

***நிலக்கடலை***

*இந்தியாவில் நிலக்கடலை பரப்பளவு மற்றும் உற்பத்தி 2018-19-ஆம் ஆண்டு 4.94 மில்லியன் எக்டர் மற்றும் 6.72 மில்லியன் டன்களாக உள்ளது. இது உலகளவில் நிலக்கடலை பரப்பளவில் (17.32 சதவீதம்) முதலிடத்திலும் உற்பத்தியில் (14.55 சதவீதம்) சோயாபீனுக்கு அடுத்தப்படியாக இரண்டாவது இடத்திலும் உள்ளது. வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் முதலாவது முன் கூட்டிய மதிப்பீடுகளின் படி, நிலக்கடலை உற்பத்தி 2020-21 ஆம் ஆண்டில் 9.53 மில்லியன் டன்கள் என கணிக்கப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு 7.19 இலட்சம் டன்கள் நிலக்கடலையை கொள்முதல் செய்துள்ளது. இதில் பெரும்பான்மையான பங்கு குஜராத்திலிருந்து மட்டுமே (5 லட்சம் டன்கள்) பெறப்பட்டுள்ளது. குஜராத், ஆந்திரா, ராஜஸ்தான், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை நிலக்கடலை பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். இவ்வருடத்தில் நல்ல மழையினாலும், கடந்த ஆண்டில் நிலக்கடலைக்கு நல்ல விலை நிலவியதாலும் காரிப் பருவத்தில் குஜராத், மற்றும் ராஜஸ்தானில் நிலக்கடலை 6 இலட்சம் ஹெக்டருக்கு மேல் பயிரிடப்படடுள்ளது.*

*தமிழகத்தில் 2018-19 –ம் ஆண்டு 3.35 இலட்சம் பரப்பளவில் 4.85 இலட்சம் டன்கள் நிலக்கடலை உற்பத்தியானதாக வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகியவை நிலக்கடலை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். இந்த மாவட்டங்களில் பெரும்பாலும் ஜூலை முதல் ஆகஸ்ட்டு வரை (ஆடி பட்டம்) மற்றும் ஜனவரி முதல் பிப்ரவரி வரை (தை பட்டம்) நிலக்கடலை விதைக்கப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி நிலக்கடலை வரத்து தமிழ்நாட்டிற்கு குஜராத், ஆந்திரப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து வருகிறது.*

*விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி*

வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 20 ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய நிலக்கடலை விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான நிலக்கடலையின் சராசரி பண்ணை விலை (ஏப்ரல் - மே 2021) கிலோவிற்கு ரூ. 51- 53 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**எள்**

உலகலவில் எள் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா முதன்மையாகத் திகழ்கிறது. வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் (2020-21) ஆம் ஆண்டில் முதலாவது முன் கூட்டிய மதிப்பீடுகளின் படி எள் 7.55 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பெருவாரியாக எள் பயிரிடப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 0.41 இலட்சம் ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 0.23 லட்சம் டன் எள் உற்பத்தி செய்யப்பட்டது. விழுப்புரம், ஈரோடு, தஞ்சாவூர், கருர், சேலம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் எள் பெருமளவில் பயிரிடப்படுகிறது.

வர்த்தக மூலங்களின்படி தமிழ்நாட்டிற்கு எள் வரத்து ஆந்திர பிரதேசம் மற்றும் குஜராத்திலிருந்து வருகிறது. இது தமிழ்நாட்டின் மொத்த தேவையில் 30 சதவீதத்தை பூர்த்தி செய்கிறது. வர்த்தக வட்டாரங்களின் படி வெள்ளை, கருப்பு மற்றும் சிவப்பு எள் வகைகள் தமிழ்நாட்டில் பயிரிடப்படப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் , வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 20ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள சிவகிரி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய எள் விலை மற்றும் சந்தை ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில், நல்ல தரமான எள்ளின் விலை அறுவடையின் போது ( ஏப்ரல் - மே 2021 வரை) ஒரு கிலோவிற்கு ரூ.90 முதல் ரூ95 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றன.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003*

*தொலைபேசி -0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*

*எண்ணெய் வித்துக்கள் துறை*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003.*

*தொலைபேசி எண் -0422-2450812*

# Price Forecast for Oilseeds

## A. Groundnut

India ranks first in groundnut area with 4.94 million hectares and second in production with 6.72 million tonnes during 2018-19 contributing to 17.32 per cent of area and 14.55 per cent of production of groundnut in the World. In India among oilseeds, groundnut occupies first position in terms of area and second position in terms of production after soybean. According to the First Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare (MoA&FW) groundnut production was 9.53 million tonnes during 2020-21. NAFED has procured 7.19 lakh tonnes in 2019-20, mainly from Gujarat alone (5 lakh tonnes). The major groundnut growing states are Gujarat, Andhra Pradesh, Rajasthan, Karnataka, Tamil Nadu and Maharashtra. Kharif groundnut acreage in Gujarat and Rajasthan witnessed more than 6 lakh hectares primarily due to good monsoon and last year's attractive prices.

According to MoA&FW, groundnut was cultivated in 3.35 lakh hectares with production of 4.85 lakh tonnes in Tamil Nadu during 2018-19. Major groundnut cultivating districts in the State are Tiruvannamalai, Villupuram, Vellore, Kanchipuram, Thiruvallur, Cuddalore, Namakkal, Krishnagiri, Salem and Dharmapuri. In most of these districts, groundnut is sown during July to August (Adi pattam) and January to February (Thai pattam). In Thaipattam, it is grown under irrigated conditions. According to the trade sources, groundnut arrivals to Tamil Nadu will be from Gujarat, Andhra Pradesh and Rajasthan.

TN-IAMP Price Forecasting Scheme implemented at the Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the past 20 year historical prices that prevailed in Tindivanam Regulated Market for groundnut. As per the results of the time series analysis and

market survey, the farm gate price of good quality groundnut during (April to May'2021) would be around Rs.51-53 per kg. Hence, farmers are advised to take up the sowing decision accordingly

**B. Gingelly**

India is the largest sesame producer in the World. According to the First Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare sesame production in 2020-21 is expected to be around 7.49 lakh tonnes. The major sesame growing States are Uttar Pradesh, Rajasthan, Madhya Pradesh and West Bengal in India. It is grown in an area of 0.41 lakh hectares with a production of 0.23 lakh tonnes in Tamil Nadu during 2017-18. Sesame is grown in Villupuram, Erode, Thanjavur, Karur, Salem, and Cuddalore district.

According to the trade sources, sesame arrivals from Andhra Pradesh and Gujarat contributes 30 per cent of the total demand in Tamil Nadu. As per trader sources, white, black and red sesame are grown in Tamil Nadu.

TN-IAMP Price Forecasting Scheme implemented at the Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the past 20 year prices for sesame that prevailed in Sivagiri Regulated Market of Erode district. As per the results of the time series analysis, the farm gate price of good quality sesame during (April to May'2021) would be around Rs.90 to Rs. 95 /- kg. Hence, the farmers are advised to take appropriate sowing decision.

***For details contact***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone No: 0422-2431405*

***For technical details, contact***

*Professor and Head*
*Department of Oil Seeds*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone No: 0422-2450812*